மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண்.122 /2019

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.1.

---

பெயர். – திரு.மணிகண்டன்

த/பெ. – திரு.ராதாகிருஷ்ணன்

கிராமம் – திருப்பூர்

தொழில் – கார்மண்ஸ்

தாலுகா – திருப்பூர்

வயது – 43.

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 22–ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை.–</u>

1) நான் இந்த வழக்கில் 5ம்வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 07.11.1966ம் தேதி ஏசுதாஸ் சுப்பிரமணி கோனாருக்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணம் அசல் 5 தாள்கள் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 16.07.1987ம் தேதியில் எஸ்.கோபாலகிருஷ்ணன் மற்றும் எஸ்.ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் பிறப்பித்துக்கொண்ட பதிவு பாகப்பிரிவினை ஆவணம் அசல் 10 தாள்கள் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 05.11.2012ம் தேதிய எனது தகப்பனாரான எஸ்.ராதாகிருஷ்ணன் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 09.10.2013ம் தேதியில் வாதிகள் பெயருக்குள்ள வாரிசு உரிமை சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 20.02.2019ம் தேதியில் 01.01.1975 முதல் 18.02.2019 வரையிலான வில்லங்க சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 21.05.2012ம் தேதியில் ஏ.ராஜவேல் நாடாா மற்றும் வள்ளியம்மாள் பிறப்பித்துக் கொண்ட பதிவு தானசெட்டில்மெண்ட் சப்ரி நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | 30.03.2019ம் தேதியில் வாதிகள் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகள் மற்றும் சார்பதிவாளர் தாசில்தார் கோவில்பட்டி ஆகியோருக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 8 | ஒப்புதல் அட்டைகளும், திரும்ப வந்த கவரும் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 9 | 12.05.2019ம் தேதியில் வாதிகள் வழக்கறிஞர் மூலம் தினமலர் நாளிதழில் வெளியிட்ட பொது அறிவிப்பு அசல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | |
|---|---|
| 10 | 25.03.1960ல் ராமேஸ்வரபுரி கோசாமியார் பெயரில் உள்ள பதிவு நன்கொடை ஆவணம் சப்ரி நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 11 | 23.07.1960ல் ஏசுதாஸ் பெயரில் உள்ள பதிவு கிரைய ஆவணம் சப்ரி நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

(வா.சா.ஆ.1,10,11 ஆவணங்களில் கண்ட சொத்துக்கும் தாவா வழக்கு சொத்துக்கும் சம்பந்தமில்லையென பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு வா.சா.ஆ.10,11 அசல் ஆவணங்கள் குறித்து பிராதில் குறிப்பிடாமல் 2ம்நிலை சான்றாவணமாக குறியீடு செய்வது குறித்து பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு இந்த ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.)

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
22.06.2026.